# என் கண்கள் பூத்துப்போகிறது



# Remnant Tamil Worship

என் கண்கள் பூத்துப்போகிறது

DATE 07 05 2007 — 119 சங்கீதம் - கப் (௮௧ - ௮௮)

என் கண்கள் பூத்துப்போகிறது - கர்த்தாவே
உம்முடைய வாக்கின்மேல் நோக்கமானது
எப்போது என்னைத் தேற்றுவீர் - அன்பவரே
உம் இரட்சிப்புக்கு என் ஆத்துமா தவிக்குது

புகையிலுள்ள துருத்தியைப் போலானேன்
உமது அடியேனுடைய நாட்கள் எம்மாத்திரம்?
என்னைத் துன்பப்படுத்தினவருக்கு எப்போது நியாயம் செய்வீர்?
உமது பிரமாணங்களையோ நான் மறவேன்
(என் கண்கள்)

அகங்காரிகள் எனக்குக் குழிகளை வெட்டினார்
அநியாயமாய் என்னைத் துன்பப்படுத்தினார்
உம்முடைய கற்பனைகளெல்லாம் உண்மையாயிருக்குதே
நீரே எனக்கு சகாயம் செய்யும்
(என் கண்கள்)

என்னை பூமியிலிருந்தபடி நீக்கிவிட யோசித்தார்
ஆனாலும் நான் உமது கட்டளைகளை விடவில்லை
உமது கிருபையின்படியே என்னை உயிர்ப்பியும்
நான் உமது வாக்கின் சாட்சியைக் காத்து நடப்பேன்
(என் கண்கள்)

